# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
**Provincial Department of Education – Northern Province**

**இரண்டாம் தவணைப் பரீட்சை – 2022**

## வரலாறு – II

பெயர் / சுட்டெண் :- …………………

**தரம் :- 10**

**நேரம் :- 3 மணித்தியாலம்**

**கவனிக்க :**
- **பகுதி I** இன் **முதலாம்** வினா **கட்டாயமானது.**
- **பகுதி II** இல் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக..
- எல்லாமாக **ஆறு** வினாக்களுக்கு விடை தருக.

**மேலதிக வாசிப்பு நேரம் : 10 நிமிடங்கள்**
வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக்கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்திக்கொள்க.

## வரலாறு - II

### பகுதி - I

01 (அ) கீழே (i) எனக் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்திலும் (ii) எனக் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தின் பகுதியிலும் குறித்துப் பெயரிடுக.

(i) கிரிந்தி ஓயா, மாதுறு ஓயா, நாச்சதுவ வாவி, கல்லோயா நீர்த்தேக்கம், சூகரதீத்த, பூநகரி, ஹொப்பிட்டிகம, மட்டக்களப்பு, தேவநகரம், செங்கடகல, மினிஹாகல்கந்த பொலன்னறுவை (12 புள்ளிகள்)

(ii) இத்தாலி, கஸ்பியன் கடல், பாரசீக வளைகுடா, கல்கத்தா, சுமாத்திரா, கொன்ஸ்தாந்திநோபிள் (6 புள்ளிகள்)

(ஆ) (I) பின்வரும் கூற்றுக்களுக்குரிய விடைகளை A,B,C,D ஒழுங்கில் தருக.

A சேனைப்பயிரோடு தொடர்புடைய வரிகளை நீக்கியதாகக் கூறப்படும் பொலநறுவை ஆட்சியாளன்.

B சகல பிரதேசத் தலைவர்களிடையேயும் நல்லுறவை வளர்க்கும் தேவையை அறிந்து செயலாற்றிய அனுராதபுர ஆட்சியாளன்

C பொலநறுவை இராசதானியின் வீழ்ச்சிக்குக் காரணமான அந்நிய ஆக்கிரமிப்பாளன்.

D இலங்கை பற்றிய குறிப்புக்களை எழுதிய அரேபிய தேசசஞ்சாரி. (4 புள்ளிகள்)

A. B எனக் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

(II) 1.படம் A இல் காட்டப்பட்டிருக்கும் உருவின் பெயர் என்ன?

2. இது கண்டுபிடிக்கப்பட்ட கல்லறை அமைந்துள்ள இடம் எது?

3. இது எக்காலப்பகுதிக்குரியது?

4. இது யாருடைய ஆடம்பர வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்றது?



(A)

(4 புள்ளிகள்)



(B)

(III) 1 படம் Bஇல் காட்டப்பட்டிருக்கும் நிர்மாணிப்பின் பெயர் யாது?

2 இது கண்டெடுக்கப்பட்ட இடம் அமைந்துள்ள மாவட்டம் யாது?

3 இது கண்டெடுக்கப்பட்ட இடத்தில் பிறந்ததாகக் கருதப்படும் மன்னன் யார்?

4 இதனை அமைக்கப் பயன்படுத்திய உலோகம் எது ? (4 புள்ளிகள்)

## பகுதி - II

02 I) புராதன காலத்தில் நாணயங்களை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட உலோகங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

II) பின்வரும் கூற்றுக்களோடு தொடர்புடைய இலக்கிய மூலாதாரங்களை முறையே எழுதுக.

A - இலங்கையின் புத்த சாசன வளர்ச்சி பற்றிக் கூறுதல்

B – இலங்கை பற்றிய குறிப்புக்கள் இடம்பெறும் குளோடியஸ் தொலமியால் எழுதப்பட்ட நூல்

C – அரசியல் தகவல்களை அடக்கியுள்ள நூல்

D - இலங்கை பற்றிய குறிப்புக்கள் இடம்பெறும் மெகஸ்தனிஸ் என்பவரால் எழுதப்பட்ட நூல் (4 புள்ளிகள்)

III) இலக்கிய மூலாதாரங்களுடன் ஒப்பிடும் போது தொல்பொருள் மூலாதாரங்கள் அதிக முக்கியம்துவம் பெறுகின்றமையை **இரண்டு** காரணிகளின் உதவியுடன் விளக்குக.

(5 புள்ளிகள்)

IV) தற்காலத்தில் தொல்பொருள் மூலாதாரங்கள் அழிவடைந்து வருவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

03 I) வரலாற்றுக்காலத்தில் அமைக்கப்பட்ட மழைநீரால் ஊட்டம்பெறும் சிறுகுளங்களை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்ட குளக்கிராமங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

(II) பின்வரும் கூற்றுக்களுடன் தொடர்புடைய இடங்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து எழுதுக.

A – 125000 ஆண்டுகள் பழமையான கற்காலத்திற்குரிய ஆதாரங்கள் கண்டெடுக்கப்பட்டமை.

B – கற்கால மனிதனின் 30 எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டமை.

C – இரண்டாகப் பிளக்கும் வகையில் துளையிடப்பட்ட மண்டையோடு கிடைக்கப்பெற்றமை.

D – கி.பி 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நிலத்தை அகழ்ந்து, அதன் மேல் மண்ணினால் மெழுகி தளம் அமைக்கப்பட்ட வீட்டின் சிதைவு கண்டறியப்பட்டமை.

(இராவண எல்ல, இரத்தினபுரி, பதிராஜவெல, பெல்லன்பதி பெலஸ்ஸ, கித்துள்கல பெலிலென, வலகம்பத்து, உடரஞ்சாமடம) (4 புள்ளிகள்)

III) முன்வரலாற்றுக்கால மக்களின் இயல்புகளை பின்வரும் தலைப்புக்களின் ஊடாக விளக்குக.

A) வாழ்க்கை முறை B) தொழினுட்பம் (5 புள்ளிகள்)

IV) வரலாற்றுக்கால குடியிருப்புக்கள் பல்வேறு தனித்தன்மையான இயல்புகளைக் கொண்டதாக விளங்கின. இவ்வகையில் வரலாற்றுக்கால குடியிருப்புக்களின் தன்மை மற்றும் கட்டமைப்பினை **மூன்று** விடயங்களின் மூலம் விளக்குக. (6 புள்ளிகள்)

04 (I) A) இல்லத் தலைவர்களில் இருந்து தெரிவுசெய்யப்படுபவரே "கமிக" என்று "சமந்த பாசதிகா" என்னும் தனது நூலில் குறிப்பிட்டவர் யார்? (1 புள்ளி)

B) புராதன காலத்தில் இல்லத்தலைவர்களுக்கு வழங்கப்பட்ட பெயர்கள் **இரண்டைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(II) புராதன காலத்தில் பின்வரும் பணிகளோடு தொடர்புடையவர்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து எழுதுக.

A – உணவுச்சாலை அதிகாரி B – அரச ஆவணங்களின் தலைவர்

C – வர்த்தக நடவடிக்கைக்கான தலைவர் D – குதிரைப் பிரிவின் தலைவர்

( பனஅதெக, கொதுறுகேனா, பதகு, கனபெடிக, ரூபஅதெக, அசஅதெக, நடஅதெக, ஹதிஅதெக, படகரிக) (4 புள்ளிகள்)

(III) புராதன காலத்தில் பின்பற்றப்பட்ட அரச கோட்பாடுகள் தொடர்பான விடயங்கள் **இரண்டினைக்** குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(IV) மத்திய மயப்படுத்தப்பட்ட அரசினை உருவாக்குவதில் பங்களிப்புச் செய்த மன்னர்கள் **மூவரைக்** குறிப்பிட்டு அவர்களது பங்களிப்புக்களைச் சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

05 (I) புராதன காலத்தில் வழக்கிலிருந்த பின்வரும் சொற்களால் அழைக்கப்பட்டவர்களை முறையே எழுதுக.

A – "மஹுவெதனா" B – "வொஹாார" C – "லேபத" (3 புள்ளிகள்)

(II) பின்வரும் பணிகளோடு தொடர்புடைய மன்னர்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து எழுதுக.

A – கர்ப்பிணித்தாய்மார்களின் தேவைக்காக "பஸவந்திநாமசால" என்னும் பெயரில் விடுதிகளை அமைத்தமை.

B – காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களுக்கென "உபசக்கரோகநாச" எனும் தனியான வைத்தியசாலையை அமைத்தமை.

C – அனுராதபுர காலத்தில் வைத்தியசாலைகளை அமைப்பதில் மிகவும் ஆர்வம் காட்டியமை.

D – நாடெங்கும் காணப்பட்ட வைத்தியசாலைகளுக்கு சகல வசதிகளையும் வழங்கியமை. (4 புள்ளிகள்)

(4ஆம் காசியப்பன், புத்ததாஸன், 5ஆம் மகிந்தன், 1ஆம் உபதிஸ்ஸ, பண்டுகாபயன், 1ஆம் பராக்கிரமபாகு, 4ஆம் உதயன், 5ஆம் காசியப்பன்)

(III) புராதன காலத்தில் நீதித்துறை என தனியான அமைப்பு செயற்பட்டுள்ளமையை **இரு** ஆதாரங்களின் துணையுடன் விளக்குக. (5 புள்ளிகள்)

(IV) புராதன காலத்தில் நெற்பயிர்ச்செய்கை ஒழுங்கமைக்கப்பட்டிருந்த விதத்தினை **மூன்று** விடயங்களின் ஊடாக விளக்குக. (6 புள்ளிகள்)

06 (I) முன்வரலாற்றுக்கால தொழினுட்பச் சிறப்பினை வெளிப்படுத்தும் முனைப்பான **மூன்று** சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(II) பின்வரும் கூற்றுக்களோடு தொடர்புடைய விடைகளை A,B,C,D என்னும் ஒழுங்குமுறையில் எழுதுக.

A – பல மண்படைகளால் அமைக்கப்பட்ட குளக்கட்டு

B – வரலாற்றுக்கு முந்திய கால கருங்கல் கட்டடமொன்றின் சிதைவு காணப்பட்ட இடம்

C – "வஜ்ரசும்பட்ட" எனும் பெயரில் இடிதாங்கி பொருத்தப்பட்ட கட்டடம்

D – "ஊரா கெட" கிணறுகளை அமைக்கும் போது புதைக்கப்பட்ட பொருள்

(4 புள்ளிகள்)

(III) சீகிரியா குன்றின் சிறப்பினை பின்வரும் இரு தலைப்புக்களின் ஊடாக விளக்குக.

A – நகர அமைப்பு B – நீர்ப்பூங்கா (5 புள்ளிகள்)

(IV) பின்வரும் குளத்தின் உறுப்புக்களுள் **மூன்றினைத்** தெரிவுசெய்து அவற்றின் பணி, அமைப்பு என்பவற்றை விளக்குக.

A – குளக்கட்டு B – அலைதாங்கி

C – கலிங்கல் D – கலிங்கற்றொட்டி (6 புள்ளிகள்)

07 (I) புராதன காலத்தில் பயன்படுத்தப்பட்ட நில அளவை முறைகள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

(II) புராதன காலத்தில் வாழ்ந்த மக்கள் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் உயர் கவனம் செலுத்தினர் என்பதற்கு **இரு** ஆதாரங்களைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(III) பொலன்னறுவை ஆலாஹா பிரிவெனாவின் சிறப்பினை அங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வராய்ச்சியின் மூலம் கிடைக்கப்பெற்ற **இரு** ஆதாரங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

(5 புள்ளிகள்)

(IV) இரும்பு பிரித்தெடுக்கப்பட்டமைக்கு ஆதாரங்கள் பெறப்பட்ட **இரு** இடங்களைக் குறிப்பிட்டு இவ்விரு இடங்களிலும் பின்பற்றப்பட்ட தொழினுட்பங்களைச் சுருக்கமாக விளக்குக.

(6 புள்ளிகள்)

08 (I) புராதன காலத்தில் பின்வருவனவற்றோடு தொடர்புடைய வரிச்சட்டங்களை எழுதுக.

A – குளங்களிலிருந்து நீரைப் பயன்படுத்துவோரிடம் இருந்து அறவிடப்பட்ட வரி

B – அரசனுக்குச் சொந்தமான நிலங்களில் பயிர் செய்வதற்காக செலுத்தப்பட்ட வரி

C – போயா(நோன்மதி) தினங்களில் வியாபாரம் செய்வோரிடம் அறவிடப்பட்ட வரி

(3 புள்ளிகள்)

(II) பின்வரும் தகவல்கள் இடம்பெறும் நூல்களை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து எழுதுக.

A – வெளிநாடு சென்ற கணவன் திரும்பிவரும் வரை தனியாக வாழ்ந்த பெண் பற்றிய தகவல்கள்

B – பிள்ளைகளுக்கு கல்வியை வழங்குவது பெற்றோர்களின் கடமையாகும் எனக்கூறுதல்.

C – அசோகமாலா துட்டகைமுனு மன்னனின் அரண்மனையில் சுவையான உணவு தயாரித்து அனைவரது மனதையும் கவர்ந்தார் எனக்கூறுதல்.

D – செல்வந்தர்கள் விரும்பி உண்ட உணவுகள் பற்றிக் கூறுதல்.

(பூஜாவலிய, சத்தர்மாலங்கார, சத்தர்மரத்னாவலி, ராஜாவலிய, லோவட சங்கராவ, சகஸ்ரவத்துப்பகரண, தம்பியா அட்டுவா கெட்டபத) (4 புள்ளிகள்)

(III) புராதன காலத்தில் பெண்கள் உயர்வாக மதிக்கப்பட்டனர் என்பதனை **இரு** காரணிகளின் துணையுடன் விளக்குக. (5 புள்ளிகள்)

(IV) புராதன காலத்தில் சூழல் பாதுகாப்பில் ஆர்வம் காட்டிய மன்னர்கள் **மூவரைக்** குறிப்பிட்டு அவர்களது பணிகளை விளக்குக. (6 புள்ளிகள்)

09 (I) பின்வரும் நகரங்கள் அமைந்திருந்த நதிக்கரைகளை எழுதுக.

A – அனுராதபுரம் B – பொலநறுவை C – மாகம (3 புள்ளிகள்)

(II) பின்வரும் இராசதானிகளின் முதல் ஆட்சியாளர்களை முறையே எழுதுக.

A – தம்பதெனியா B – கோட்டை

C – யாப்பகுவ D – குருநாகல் (4 புள்ளிகள்)


(III) உலர் வலயத்தில் புராதன நகரங்கள் தோன்றுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் **இரண்டைக்** குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(V) பொலநறுவை இராசதானியின் வீழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் **மூன்றைக்** குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

பெயர் / சுட்டெண் :- .....................

தரம் :- 10

01. அ(I)



01. அ(II)

